திருவெறும்பூர் தொகுதியில் துவாக்குடியில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ5 கோடி மதிப்பீட்டில் 13 வகுப்பறைகள் கொண்ட கட்டிடத்திற்கு தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அடிக்கல் நாட்டினார்.பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திருவெறும்பூர் அருகே உள்ள துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ரூ 5 கோடி மதிப்பீட்டில் கீழே 5 வகுப்பறை மேலே 8 வகுப்பறை என 13 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு ரூ 5 கோடி தமிழக அரசு நிதி ஒதுக்கி உள்ளது.அதன் மூலம் கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்திற்குள் நடந்தது. இந்த விழாவிற்கு துவாக்குடி நகர மன்ற தலைவர் காயாம்பு தலைமை வைகித்தார். தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில் அரசு அதிகாரிகளும், கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்களும், மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டனர்.

திருவாரூரில் நடைபெற்ற மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் முத்துப்பேட்டை ஒன்றிய பா.ஜ.க. செயலாளர் இடும்பாவனம் பழனி தன்னை அந்த கட்சியில் இருந்து விடுவித்துக்கொண்டு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் திமுகவில் தன்னை இணைத்துக்கொண்டார். மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

திருவாரூர் வருகை தரும்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு!

திருவாரூர், மார்ச்20 -

தமிழ்நாடு முதல்வர்திராவிட நாயகர் தளபதி அவர்கள் திருவாரூர் வருவதை யொட்டி அவருக்கு திருவாரூர் மாவட்டக் கழகம் சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்ற மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மூத்த ஒன்றிய செயலாளர் வலங்கைமான் அன்பரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ். பாண்டியன், கோ.செல்வம், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.எஸ்.தியாகபாரி, டி.செந்தில், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் :-

மண்ணின்மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூருக்கு தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்திற்கு வருகைதரும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முதல்வர், இந்திய துனைப் பெருங்கண்டமே வியந்து போற்றும் திராவிட நாயகர் தளபதி அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட கழகம் சார்பில் பிரமாண்ட வரவேற்பளிப்பதுடன் , கொரடாச்சேரியில் நடைபெறும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு, கிளை கழகங்களில் இருந்து பெருந்திரளாக கலந்து கொள்வது .

ஒன்றிய பிஜேபி அரசின் பாசிச ஆட்சியை அகற்றி இந்தியாவை காக்க நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் , திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி தேர்தல் பணியாற்றி புதுச்சேரி உள்ளிட்ட நாற்பது தொகுதிகளிலும் வெற்றிபெறுவது, தமிழ்நாட்டிலேயே நாகப்பட்டினம் தொகுதியில் கழக கூட்டணியை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய அயராது தேர்தல் பணியாற்றுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டம் முடிவில் நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் நன்றி கூறினார், கூட்டம் முடிந்து கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட ஒன்றிய ,நகர , பேரூர் செயலாளர்களும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்களும் கழக தலைவர் தளபதி அவர்கள் பங்கேற்கவிருக்கும் கோரடச்சேரி பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கும் திடலை மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமையில் பார்வையிட்டனர்.

கோவை நாடாளுமன்றத்திற்குட்பட்ட கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி தி.மு.கழக தகவல் தொழில்நுட்ப அணியின் கலந்தாலோசனை கூட்டம் கவுண்டம்பாளையம் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது தேர்தல் களத்தில் தொகுதியில் செய்ய வேண்டிய சமூக ஊடக பிரச்சாரம் குறித்து மாநில மாணவர் அணி தலைவர் இராஜீவ் காந்தி சிறப்புரையாற்றினார். உடன் தகவல் தொழிற்நுட்ப அணி மாநில துணைச்செயலாளர் தமிழ்மறை . வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, ஒன்றிய கழக செயலாளர் சுரேஷ், பகுதி கழக செயலாளர் சரத் விக்னேஷ், பேரூர் கழக செயலாளர் சுரேந்திரன். மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் ஆரோக்கிய ஜான் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ஹரிஷ் மற்றும் மாவட்ட துணை, தொகுதி, பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பொன்னமராவதி மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் திட்டப் பணிகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, மார்ச்20 -

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 14.03.2024 அன்று பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பொன்னமராவதி மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன்படி, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், வேகுப்பட்டி ஊராட்சியில், வேகுப்பட்டி ஏனமாரியம்மன் கோவில் அருகில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள உணவு உண்ணும் கூடம் மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், புதுநிலைவயல் ஊராட்சி, மாங்குடி சாஸ்தார் என்.என்.டி சாலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், நமக்கு நாமேத் திட்டத்தின்கீழ் ரூ.49.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாலை உள்ளிட்ட முடிவுற்றத் திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், ஆயிங்குடியில், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் ஆயிங்குடி முதல் உமையாள்புரம் வரை புதிதாக அமைக்கப்படவுள்ள சாலைப் பணி மற்றும் தஞ்சாவூர் சாயல்குடி பிரிந்து செல்லும் இடத்தில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.2.39 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தெக்கூர் சாலைப் பணி மற்றும் புதுக்கோட்டை ஏம்பல் சாலையில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கொசவப்பட்டி சாலைப் பணி உள்ளிட்ட புதிய திட்டப் பணிகள் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அலுவலர்கள் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்களின் மீது மிகுந்த அக்கறைகொண்டு செயல்படுத்தப்படும் இது போன்ற மக்கள்நலத் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திட வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைத் துறை) செந்தில்குமார், உதவி கோட்டப் பொறியாளர் திராவிடன், உதவிப் பொறியாளர் செய்யது, ஒப்பந்தகாரர்கள் வெங்கடேசன், கணேசன், பாரிவள்ளல், வட்டார வளர்ச்சி அலுவலர் சிங்காரவேலன், வட்டாட்சியர்கள் எம்.சாந்தா, புவியரசன், புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமத்தின் உறுப்பினர் வி.ஆர்.இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.